<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

நாள் 21.07.2026

அசல் வழக்கு எண். 110 /2011

பி.சா. 2. – கிருஷ்ணக்குமார் த/பெ. செல்லப்பன் என்பவரை வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. பிரதிவாதி மல்லிகா என்ன கம்பெனி நடத்தி வந்தார் என்றால் ஹாலொ பிளாக் கம்பெனி நடத்தி வந்தார். எந்த வருடம் கம்பெனி நடத்தி வந்தார் என்றால் 2008 ஆம் வருடம் ஆகும்.அதற்கு பிரதிவாதி மட்டும் தான் உரிமையாளரா என்றால் பிரதிவாதி மட்டும் தான் உரிமையாளர். கம்பெனி பெயர் என்னவென்றால் மல்லிகா இன்டஸ்டிரிஸ். மேற்படி கம்பெனி பதிவு செய்யப்பட்டதா என்றால் கிண்டி SSI ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. எந்த வருடம் பதிவு செய்யப்பட்டது என்றால் 2007 ல் கம்பெனி ஆரம்பித்து 2008 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விவரங்கள் பற்றி எனக்கு எப்படி தெரியும் என்றால் அவரது தனிப்பட்ட உதவியாளராக வேலை செய்த வகையில் தெரியும்.கம்பெனியில் எத்தனை நபர்கள் வேலை செய்தார்கள் என்றால் ஐந்து நபர்கள் வேலை செய்தார்கள். மேனேஜர், உதவியாளர்கள் இரண்டு, டிரைவர் மற்றும் வாட்ச்மென் ஒருவர். எனது சம்பளம் எவ்வளவு என்றால் வாரம் ரூபாய் 500 மற்றும் வேலை நாட்களில் காலை மதியம் உணவு இலவசமாக வழங்கப்படும். வாரம் ரூ.500 வேலை இருந்தால் தான் கொடுப்பார்களா என்றால் வேலை இல்லை என்றாலும் கொடுப்பார்கள்.

2. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ஆம் வகுப்பு பாதியில் நிறுத்திவிட்டேன். மல்லிகாவை எப்படி எனக்கு தெரியும் என்றால் இருவரும் ஐவுளிக்கடையில் வேலை பார்த்ததில் பழக்கம். கம்பெனி 2008ல் இருந்து எத்தனை வருடம் நடந்தது என்றால் 2009 நவம்பர் மாதம் கம்பெனி மூடப்பட்டது. கம்பெனியில் பொருட்கள் திருடுபோய்விட்டது. அது சம்பந்தமாக அக்டோபர் 14, 2009 ல் புகார் கொடுக்கப்பட்டு பின்னர் கம்பெனியை பிரதிவாதி மூடிவிட்டார். நான் 2001 முதல் 2010 வரை பிரதிவாதிக்கு உதவியாளராக இருந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு அதுவரை சம்பளம் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். நான் வாதி மற்றும் பிரதிவாதி வழக்கு விவரங்களை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அது பற்றி மல்லிகா சொல்லி தெரியும். எனக்கு வழக்கு பற்றி விவரங்கள் எப்போது தெரியும் என்றால் 2009 – 2010 வருடத்தில் தெரியும். பொருட்கள் திருடுபோனது சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளதாக விவரம் தெரியும் மற்ற விவரம் பற்றி தெரியாது.

3. குத்தகை ஆவணத்தில் நான் சாட்சியாக உள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. ஒப்பந்தம் செய்தபோது நான் இருந்தேன். சாட்சி கையெழுத்து யார் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. எனது முதல் விசாரணையில் தண்ணீர் பற்றாக்குறை இல்லை என்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாடகை வசூல் செய்ய எப்போது நான் சென்றேன் என்றால் 2008 - 2009 ஆண்டுகளில் ராஜ்குமார் மற்றும் அவரது தந்தை மணிவாசகம் ஆகியோர்களிடம் கேட்டுள்ளேன். வாடகை அவர்கள் கொடுக்கவில்லை. நான் வாடகை எதுவும் வாதியிடம் கேட்கவில்லை என்றும், நான் பிரதிவாதியின் தனிப்பட்ட உதவியாளர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வாடகை பாக்கி சம்பந்தமாக பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி நடவடிக்கை எடுத்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி மணல் சேமித்து லாரிகளை நிறுத்தி பயன்படுத்தி வருவதாக யார் சொன்னார் என்றால் அதை பற்றி பிரதிவாதி சொன்னார். வாதி தாவா இடத்தில் மணல் சேமித்து லாரிகளை நிறுத்தி பயன்படுத்தி வருவதாக போலீஸ்ல் புகார் அல்லது வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதி கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. ஆனந்தன் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றதாகவும், அப்போது நான் உடன் சென்றதாகவும் காவல் நிலையத்தில் புகாரை பெற்றுக் கொள்ளவில்லை என்பதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். பின்னர் உயர் நீதிமன்ற மூலமாக நடவடிக்கை எடுத்ததாக கூறியுள்ள விவரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதி ஆரம்பத்தில் 6 லட்சம் முன்பணம் ஆகவும், பின்னர் 2 லட்சம் கூடுதல் தொகையாக பிரதிவாதிக்கு கொடுத்துள்ளார் என்றும் மேற்படி முன்பணம் 8 லட்சத்தை வாதி பிரதிவாதியிடம் திரும்பக் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் அந்த வழக்கில் மேற்படி முன்பணத்தை ஏமாற்றும் நோக்கில் நான் வாதி பிரதிவாதியின் ஹாலோ பிளாக் நிறுவன இயந்திரங்களை திருடிவிட்டதாக பொய் புகார் கொடுத்து அதற்கு நஷ்ட ஈடு கேட்டு பொய் வழக்கு அவ. எண் 237/2017 என்ற வழக்கினை பின்னிட்டு எட்டு ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயர் நீதிமன்ற நடவடிக்கையை பொறுத்து பிரதிவாதியிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தற்போது பிரதிவாதி நல்ல உடல் நிலையில் உள்ளார் என்றால் வயது மூப்பின் காரணமாக உடல் நிலை பாதிப்பு உள்ளது பிரதிவாதி வயது என்னவென்றால் வயது தெரியாது. நானும் ஆனந்தனும் சேர்ந்து மல்லிகாவை நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க விடாமல் நாங்கள் இருவரும் பிரதிவாதிக்காக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளோம் என்றால்

**சரியல்ல. எனக்கு வழக்கு சம்பந்தமாக விவரங்கள் தெரியாமல், குத்ததகை விவரங்கள் தெரியாமல்  பொய்யாக சாட்சியம் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை இல்லை**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/A.Mohamed Ali,
Additional Subordinate Judge,
Kancheepuram.